This Question Paper consists of 45 questions and 12 Printed pages.
12 பக்கங்களைக் கொண்ட இவ்வினாத்தாளில் 45 வினாக்கள் உள்ளன.

Code No. **71/S/237/A/TM**
குறியீடு எண்:

Roll No. (ரோல் நம்பர்) | | | | | | | | | | | | |

Serial No.

# TAMIL
## (தமிழ்)
## (237)

Day and Date of Examination
(தேர்வு நடைபெறும் நாள் மற்றும் தேதி) ____________________

Signature of Invigilators
(தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம்)
1. ____________________
2. ____________________

UNNATI EDUCATIONS
EK KADAM UNNATI KI AUR

பொதுக் குறிப்புகள் :

1. தேர்வு எழுதுவோர் தங்களின் வரிசை எண்ணை (Roll No.) வினாத்தாளின் முன்பக்கம் எழுத வேண்டும்.

2. வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினாகளின் எண்ணிக்கையும் வினாத்தாளின் முன்பக்கம் அச்சாகியுள்ள வினாகளின் எண்ணிக்கையும் மொத்தப் பக்கங்களின் எண்ணிக்கையும் சரியாக உள்ளனவா என்பதையும் அனைத்து வினாக்களும் வரிசையாக உள்ளனவா என்பதையும் சரிபார்க்கவும்.

3. வினாத்தாளில் ஏதேனும் அடையாளக் குறிகள் இட்டாலோ அல்லது தேர்வு எழுதுபவர் தனது எண்ணை அதற்கென ஒதுக்கப்பட்டாத இடத்தில் எழுதினாலோ தேர்வு எழுதுபவர் தேர்வு எழுதும் தகுதியை இழக்க நேரிடும்.

4. உங்களது வினாத்தாளின் எண் **71/S/237/A/TM** எண்ணை விடைத்தாளில் எழுதுங்கள்.



UNNATI EDUCATION
9899436384: 9654-279-279

# TAMIL

## (தமிழ்)

## (237)

காலம் : 3 மணி] [மொ. மதிப்பெண் : **100**]

குறிப்பு :

(1) அனைத்து வினாகளுக்கும் விடையளிக்கவும்.

(2) விடைகளுக்குரிய சரியான வினா எண்களை எழுதவும்.

(1) Answer of all questions are to be given in the Answer-Book given to you.

(2) **15** minutes time has been allotted to read this question paper. The question paper will be distributed at **02:15** p.m. from **02:15** p.m. to **02:30** p.m., the students will read the Question Paper only and will not write any answer on the Answer-Book during this Period.

UNNATI EDUCATIONS

பகுதி - அ

பிரிவு - அ : தேர்ந்தெடுக்கப்பட்ட பாடப்பகுதி

(**5** செய்யுள் + **9** உரைநடை = **14** மதிப்பெண்கள் )

**பின்வரும் வினாகளுக்கு விடையளிக்கவும் :** **[14 × 1 = 14]**

EK KADAM UNNATI KI AUR

**1.** தாய்மொழியைப் போல வணங்கத்தக்கது எது? **[1]**

**2.** சிலுவையில் நமக்கு நாமே அடித்துக் கொண்ட ஆணிகள் யாவை? **[1]**

**3.** உறுதிப்பொருட்களில் ஒன்றோ பலவோ குறைந்து வருவது? **[1]**

(அல்லது)

தேவர்களின் நகரங்களை விட சிறப்பான நகரம் எது?

**4.** கண்ணுடையவர் என்று உயர்த்திச் சொல்லப்படுபவர் யார்? **[1]**

(அல்லது)

மேன்மை உடைய செல்வமாக விளங்குவது எது?

**5.** வேளாண் வேதம் என்று அழைக்கப்படும் நூல் எது? **[1]**

(அல்லது)

நல்லறங்களைப் பின்பற்றி வாழ்பவர் யார்?



UNNATI EDUCATION
9899436384: 9654-279-279

பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கவும். (வினா எண் 6 - 7) :

அப்துல்கலாம் அவர்கள் பேசிய உரையில், நம் நாடு விடுதலை பெற்றபோது நான் 16 வயது நிரம்பாத இளைஞன். எங்கள் பள்ளித்தலைமை ஆசிரியர் எங்களை வானொலிச் செய்திகளைக் கேட்கச் சொல்வார். நாங்கள் அதன் மூலம் நாட்டு நடப்புகளை அறிந்தோம். நான் பள்ளியில் படித்த நாட்களில் எனது சகோதரருக்கு உதவியாக வீடுதோறும் தினமணி நாளிதழை விநியோகிப்பது வழக்கம். அப்போது நானும் தினமணி செய்திகளைத் தினமும் படித்து அறிந்தேன். தில்லியில் சுதந்திர தின விழா கொண்டாட்டம். தலைவர்கள் எல்லோரும் அங்கே கூடியிருந்தார்கள்.

இந்தியாவின் எதிர்காலம் பற்றி உரையாற்றினார்கள். அந்தச் சமயத்தில் வங்காளத்தில் கலவரம் மூண்டது. துடித்துப் போனார் காந்தியடிகள். உடனே அவர் தலைநகர் கொண்டாட்டங்களைத் தவிர்த்தார். கலவரப் பகுதியை நோக்கி விரைந்தார். 'நவகாளி' பாதயாத்திரியை மேற்கொண்டார். அங்குள்ள மக்களுக்கு ஆறுதல் சொன்னார். காயம்பட்டவர்களுக்கு உதவிகள் செய்தார். அவர்தான் ஒப்பற்றத் தலைவர். அவரின் மனஉறுதி கண்டு மெய் சிலிர்தேன். அவர்தான் மகாத்மா.

மகாத்மா காந்தி போன்ற மன உறுதியும் பொதுநலச் சேவையில் நாட்டமும் கொண்ட மக்கள் தேவை. அவர்கள்தான் எதிர்கால இந்தியாவில் வழிகாட்டியாகத் திகழ்வார்கள்.

**6.** பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டனுக்கு சரியா? தவறா? எனக் கண்டறிக. [2 × 1 = 2]

(I) இந்தியா விடுதலை பெற்ற போது அப்துல் கலாம் 16 வயது நிரம்பிய இளைஞன்.

(II) பள்ளி படித்த நாட்களில் தினமணி நாளிதழை வீடுதோறும் விநியோகித்தார்.

(III) நவகாளி பாதையாத்திரையை மகாத்மா காந்தி மேற்கொண்டார்.

**7.** சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. [1 × 1 = 1]

அப்துல் கலாமின் தலைமை ஆசிரியர் எந்தச் செய்திகளைக் கேட்கச் சொல்வார்?

(அ) வானொலிச் செய்திகள்

(ஆ) தினமணிச் செய்திகள்

(இ) சுதந்திரச் செய்திகள்

(ஈ) தொலைக்காட்சிச் செய்திகள்

**8.** பொருத்துக. [4 × 1 = 4]

| | | |
|---|---|---|
| (அ) தேவப்பிரியன் அசோகன் | - | மெகஸ்தனிஸ் |
| (ஆ) கிரேக்கத் தூதர் | - | எச்.ஜி. வெல்ஸ் |
| (இ) சரித்திர விசேஷம் | - | வீரமா முனிவர் |
| (ஈ) கடித இலக்கிய முன்னோடி | - | நேரு |



UNNATI EDUCATION
9899436384: 9654-279-279

9. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. [2 × 1 = 2]

(I) பள்ளி முதல்வரின் ஆறாம் விரல் போன்றது எது?

(அ) நூல்கள்

(ஆ) பிரம்பு

(இ) பாடம்

(ஈ) பள்ளி

(II) வன்முறையின் இன்னொரு பெயர் என்ன?

(அ) உயர்வு நவிற்சி

(ஆ) ஒழுங்கு

(இ) சாணிப்பால் புகட்டுவது

(ஈ) மிளாரினால் அடிப்பது

பிரிவு - ஆ

பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கவும். (வினா எண் 10 - 11)

1946இல் எனியாக் எனப்படும் முதல் மின்னணுவியல் கணினி வடிவமைக்கப்பட்டது. நியூமரிக்கல் இன்டக்ரேடல் அன்ட் கால்குலேட்டர் என்பதன் சுருக்கமே எனியாக்.

எனியாக்கில் 18,000 வால்வுகளும் (குழல்கள்) 70,000 ரெசிஸ்டர்களும் (தடையங்கள்) 10,000 கெபாசிடர்களும் (கொண்மிகள்) 7,500 சுவிட்சுகளும் (திறப்பான்கள்) இடம்பெற்றன.

எனியாக்கின் எடை 30 டன், கொள்ளளவு 15,000 சதுர அடி, ஒரு வினாடியில் 10 இலக்க எண்களை 5,000 முறை கூட்ட முடிந்தது. கற்பனை செய்து பாருங்கள். இதைப் பராமரிக்க எவ்வளவு பெரிய வீடு வேண்டும்.

ஒரு கணினி 254 கிலோபைட் முதல் பல மெகாபைட் வரை நினைவுகளைத் தக்க வைத்துக் கொள்ளும் திறனுடையது.

10. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றனுக்கு விடுபட்ட இடங்களைப் பூர்த்தி செய்க. [3 × 1 = 3]

(I) நியூமரிகல் இன்டக்ரேடல் அன்டு கால்குலேட்டர் என்பதன் சுருக்கம் ........................

(II) எனியாக் எந்த ஆண்டு வடிவமைக்கப்பட்டது ........................

(III) எனியாக்கின் எடை அளவு ........................

(IV) ஒரு கணினி எவ்வளவு நினைவுகளைத் தக்க வைத்துக் கொள்ளும் ........................



UNNATI EDUCATION
9899436384: 9654-279-279

11. எவையேனும் மூன்றனுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(I) எனியாக்கில் உள்ள வால்வுகள் எத்தனை? [3 × 1 = 3]

(அ) 10,000 (ஆ) 18,000

(இ) 70,000 (ஈ) 7500

(II) எனியாக்கில் உள்ள ரெசிஸ்டர்கள் என்பதன் தமிழாக்கம் என்ன?

(அ) குழல்கள் (ஆ) கொண்டமிகள்

(இ) தடையங்கள் (ஈ) திறப்பான்கள்

(III) எனியாக்கின் கொள்ளளவு என்ன?

(அ) 18,000 (ஆ) 5,000

(இ) 10,000 (ஈ) 15,000

(IV) ஒரு வினாடியில் 10 இலக்க எண்களை எத்தனை முறைக் கூட்ட முடிகிறது?

(அ) 5,000 (ஆ) 18,000

(இ) 10,000 (ஈ) 15,000

பின்வரும் பத்தியைப் படித்து கேட்கப்பட்ட வினாகளுக்கு விடையளிக்கவும். (வினா எண் 12)

நிலவு வெளிச்சத்தில் சிந்து நதியின் மீது சேர நாடாகிய கேரளத்துப் பெண்களுடன் அழகிய தெலுங்கு மொழியில் பாடல்களைப் பாடியவாறு படகுகள் ஓட்டி விளையாடி மகிழ்வோம்.

கங்கை நதிக்கரையில் பெருமளவில் விளைகிற கோதுமையைப் பெற்றுக்கொண்டு அதற்கு மாற்றாகக் காவிரி மண்ணில் விளையும் வெற்றிலையைத் தருவோம். வீரம் செறிந்த மராட்டியர்களிடமிருந்துக் கவிதைகளை வாங்கிக்கொண்டு, அவற்றுக்காகச் சேரத்து யானைகளின் தந்தங்களைப் பரிசாகத் தருவோம்.

காசி நகரில் இருந்து ஒரு புலவன் பேசும் உரையை, காஞ்சி நகரில் இருந்தவரே கேட்பதற்கு ஏற்ற ஒரு கருவியைக் கண்டுபிடிப்போம். இராசபுதன வீரர்களுக்குத் தங்க வயல் கொண்ட கன்னட மண்ணில் கிடைக்கும் உயர்ந்த தங்கத்தைத் தந்து மகிழ்வோம்.

உயர்ந்த பட்டு நூல்களால் ஆடை நெய்தும், தரமான பருத்தி நூல்களால் உடை நெய்தும், மலைபோல் வீதிகளில் குவிப்போம். இவற்றைப் பெருமளவில் பொருட்கள் கொண்டுவரும் காசிநகர் வணிகருக்கு விற்று முடிப்போம்.

12. பின்வருவனவற்றுள் எவையேனும் ஐந்தனுக்குக் சரியா? தவறா? எனக் கண்டறிக. [5×1=5]

(I) கங்கை நதிக்கரையில் வெற்றிலை விளைகிறது.

(II) சேர நாட்டைக் கேரளா என்று பாரதி அழைக்கிறார்.

(III) மராட்டியர்களிடமிருந்து வெற்றிலைகளை வாங்குவோம்.

(IV) சேரத்து யானைகளின் தந்தங்களைப் பரிசாக வழங்கியிருக்கிறார்கள்.

(V) காஞ்சி நகரிலிருந்துக் கேட்பதற்குப் பல பாடல்களைக் கண்டுபிடிப்போம்.

(VI) இராசபுதன வீரர்களுக்குத் தங்கத்தைப் பரிசாக்கினர்

(VII) பருத்தி உடைகளை நெய்து மலைபோல் வீதிகளில் குவித்தனர்.



UNNATI EDUCATION
9899436384: 9654-279-279

**13.** பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றினுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **[1 × 1 = 1]**

(I) பாரத நாட்டின் தென்பகுதியை எப்பெயரால் அழைப்பர்?

(அ) நிலமகள் (ஆ) தமிழ்ப்பெண்

(இ) திராவிட நாடு (ஈ) பிறை நெற்றி

(II) கட்சிகளின் கலப்பு மணத்தை எவ்வாறு அழைக்கின்றோம்?

(அ) கூட்டணி (ஆ) உயர்ந்த பண்பாடு

(இ) வண்ண நிறங்கள் (ஈ) மாலைகள்

பிரிவு - இ : இலக்கணம்

**14.** பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றினுக்கு வேற்றுமை உருபைக் கண்டறிக. **[1 × 1 = 1]**

(I) மரத்தைத் தாண்டுவதும்

(II) மகளுக்குக் கல்யாணம்

**15.** பின்வருவனவற்றுள் ஏதேனும் மூன்றினுக்கு சுட்டுப்பெயர்களைப் பொருத்தி எழுது. **[3 × 1 = 3]**

(I) ஆண்பால் - அது, இது

(II) பலர்பால் - அவன், இவன்

(III) ஒன்றன்பால் - அவை, இவை

(IV) பவின்பால் - அவர், இவர்

**16.** பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டனுக்குப் பண்புத்தொகைச் சொற்களைக் கண்டறிந்து பிரித்தெழுதுக. **[2 × 1 = 2]**

(I) செந்தமிழ்

(II) காளையார்கோவில்

(III) பைந்தமிழ்

**17.** பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டனுக்கு அடுக்குத் தொடரை வாக்கியத்தில் அமைக்கவும். **[2 × 1 = 2]**

(I) சலசல

(II) சரசர

(III) கமகம

(IV) லபக்லபக்

**18.** பின்வரும் சொற்களில் ஏதேனும் ஒன்றினைப் பிரித்து எழுதுக. **[1 × 1 = 1]**

(I) முகத்திரண்டு -

(II) மணற்கேணி -



UNNATI EDUCATIONS
EK KADAM UNNATI KI AUR
UNNATI EDUCATION
9899436384: 9654-279-279

பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்பட்ட வினாகளுக்கு விடையளிக்கவும். (வினா எண் 19 - 20)

மக்கள் பலரும் கூடி வாழ்கின்றனர். இந்நிலையே சமுதாயம் எனக் குறிப்பிடப்படுகிறது. ஒரு சமுதாயம் சிறப்புற அமைவதற்கு அதில் இடம்பெற்றுள்ள தனிமனிதன் ஒழுக்கத்துடன் நடக்கவேண்டும். நற்பண்புகளையும் கொண்டு வாழ வேண்டும். அப்போதுதான் மக்கட் சமுதாயம் தன் வாழ்வியல் நெறிகளில் மேன்மையுற்றுத் திகழும். இதற்கு அடிப்படையாய் அமைவன நூல்கள், அவை மக்களின் குற்றங்களைப் போக்கி நல்ல வழியில் வாழ அறிவுறுத்துகின்றன.

இவ்வகை நூல்களை அற இலக்கியங்கள் என்று கூறுவர். சான்றோர்களின் அறிவுரைகளையே உலகநீதியாக உரைப்பதால் இவற்றை நீதி இலக்கியம் எனவும் குறிப்பிடுவர். இவ்வற இலக்கியங்கள் தமிழ் மொழியில் மிகுதியாகக் காணப்படுகின்றன. அவை பதினெண் கீழ்க்கணக்கு என்னும் தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இந்நூல்களுள் திருக்குறள் முதலாக ஏலாதி ஈறாகக் கூறப்படும் பதினோரு நூல்களும் அற நூல்களாகும்.

**19.** சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது. **[3 × 1 = 3]**

(I) மக்கள் பலரும் கூடி வாழும் நிலை எவ்வாறு குறிப்பிடப்படுகிறது?

(அ) வாழ்வியல் (ஆ) சமுதாயம்

(இ) நெறி (ஈ) நற்பண்புக் கூட்டம்

(II) மக்கட் சமுதாயம் தன் வாழ்வியல் நெறிகளில் மேன்மையுற அடிப்படையாய் அமைவது

(அ) ஒழுக்கம் (ஆ) நற்பண்புகள்

(இ) நூல்கள் (ஈ) சான்றோரின் உரை

(III) அற நூல்கள் எத்தனை வகை?

(அ) 2 (ஆ) 8

(இ) 10 (ஈ) 11

**20.** பின்வரும் வினாகளுக்கு ஏதேனும் ஒன்றினுக்கு விடையளிக்கவும். **[1 × 1 = 1]**

(I) எதனையும் அறிவுக் கூர்மையில் காண்பவர் ................................

(II) ........................ நல்லொழுக்கங்களைப் பெற்றவர்.

**21.** பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கினுக்குச் சரியா? தவறா? எனக் கண்டறிக. **[4 × 1 = 4]**

(I) இலட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கையைத் திருத்தியவர் புத்தர்.

(II) மொட்டைமரத்தின் கதைத் தலைவி அஞ்சம்மா.

(III) நாவல் எனப்படும் சிறுகதைத் தொடர்கதையாக மாறுகிறது.

(IV) ஆலும் வேலும் பல்லுக்குறுதி; நாலும் இரண்டும் எண்ணுக்குறுதி.

(V) கணினி என்பது ஒரு வலைப்பளு எந்திரம்.

(VI) அப்துல்கலாம் அவர்கள் எழுதிய நூல் இந்தியா–2020.

(VII) அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும்.

(VIII) குறைகுடம் நீர் தளும்பல் இல்.



UNNATI EDUCATION
9899436384: 9654-279-279

22. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டனுக்கு ஓரிரு வார்த்தைகளில் விடையளிக்கவும். [2 × 1 = 2]

(I) எது சிறந்த செல்வம்?

(II) வாழ்நாள் என்பது யாது?

(III) அறிவுத்திறத்தால் சிறந்தவர் யார்?

(IV) அறிவுடையோரின் இயல்புக்குக் காட்டப்படும் பழமொழி யாது?

பகுதி - ஆ - பிரிவு - அ

(செய்யுள் 5 + உரைநடை 6 = 11 மதிப்பெண்கள்)

23. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றினுக்கு 20 முதல் 25 சொற்களில் விடையளிக்கவும். [1 × 2 = 2]

(I) தலைவன் தலைவியின் நட்பு எத்தன்மை வாய்ந்தது?

(II) பெரிய ஆற்றின் வரவைக் கணியன் பூங்குன்றனார் எவ்வாறு காட்டுகிறார்?

24. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றினுக்கு 40 முதல் 45 சொற்களில் விடையளிக்கவும். [1 × 3 = 3]

(I) கற்பதனால் ஏற்படும் பயன் யாது?

(II) தமிழ்ச் சமூகத்தின் விளைச்சலுக்குத் தமிழ் எவ்வாறு பயன்படுகிறது?

25. பின்வரும் வினாகளுக்கு 25 முதல் 30 சொற்களில் விடையளிக்கவும். [1 × 2 = 2]

தேசியப் பாதுகாப்போடுப் பின்னிப் பிணைந்த மூன்று அம்சங்கள் யாவை?

26. (I) தானியங்கள் என்றால் என்ன? [1 × 2 = 2]

(அல்லது)

(II) மு.வ. போற்றுகின்ற அறிஞர்கள் யாவர்?

27. (I) அசோகர் அமைத்த கல்விக்கூடங்கள் யாவை? [1 × 2 = 2]

(அல்லது)

(II) மரங்களின் பயன்களில் மூன்றினைத் தருக.



UNNATI EDUCATION
9899436384: 9654-279-279

பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கவும். (வினா எண் 28 - 29)

தேன் சிந்துகின்ற மலர்களை மாலையாகச் சூடியுள்ள தசரதன் ஒருவாறு மனத்தைத் தேற்றிக்கொண்டு, பெரிய முனிவரே! இந்த இராமன் சிறுவயது குழந்தை ; ஆயுதப் பயிற்சி இல்லாதவன். எனவே கங்கையைச் சடைமுடியில் சூடிய சிவபெருமானும் பிரம்மனும் இந்திரனும் உன் வேள்வியைத் தடை செய்யும் நோக்கோடு ஒன்றாகக் கூடி வந்தாலும் அவர்களுக்கு நான் தடையாக நிற்பேன். உன் வேள்வியைக் காப்பேன். எனவே, பெரிய வேள்வியைச் செய்வதற்கு எழுந்தருள்க என்று தசரதன் கூறினான். அரக்கர்களுடன் போரிடும் அளவிற்கு வயது முதிர்ச்சியோ ஆயுதப் பயிற்சியோ இல்லாதவன் இராமன் என்பது அவனது குழந்தைப் பருவத்தைக் காட்டுகிறது. அப்பொழுது அவனுக்கு வயது 12 ஆதலால் நானே வருவேன் என்று தசரதன் கூறுவது அம்முனிவருக்கு உண்மையில் உதவிட வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் வெளிப்பாடு.

சிவபெருமான், பிரம்மன், இந்திரன் போன்ற தலைமைத் தேவர்கள் இடையூறு செய்ய நினைத்தால் கூட அவற்றை வெற்றிக் கொண்டு, நான் உனது வேள்விக்கு உறுதுணையாய் இருப்பேன் என்று தசரதன் கூறுவது முனிவருக்கு நம்பிக்கை ஏற்படுத்துவதற்காக எனலாம். இடையூறுக்கு இடையூறு விளைவிப்பேன் என்பதை இடும்பைக்கு இடும்பைப் படுப்பர் என்ற திருக்குறளோடு ஒப்பிட்டு நோக்கலாம்.

UNNATI EDUCATIONS

**28.** தசரதன் முனிவருக்குச் செய்த உதவி என்ன? **[2]**

**29.** (I) வேள்வியைக் காப்பதற்காகத் தசரதன் என்ன செய்வதாகக் கூறினார்? **[2]**

EK KADAM UNNATI KI AUR

(அல்லது)

(II) திருக்குறளோடு ஒப்பிட்டுக் கூறுவது என்ன?

பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்படும் வினாகளுக்கு விடையளிக்கவும். (வினா எண் 30 - 32)

தொல்காப்பியம் மக்கள் வாழ்க்கையினை அகம், புறம் என இருவகையாகப் பகுத்து விளக்குகின்றது. ஒத்த அன்புடைய கணவனும் மனைவியும் கலந்த வாழும் வாழ்வு அகவாழ்வாகும். இங்ஙனம் பல்லாயிரக்கணக்கானக் குடும்பங்கள் ஒன்றி வாழ்வதற்குரிய அரசியல் வாழ்வ புறவாழ்வாகும்.

அகவாழ்வு களவு, கற்பு என இருவகைப்படும். யாருக்கும் தெரியாத நிலையில் ஒருவரை ஒருவர் சந்தித்து வாழும் நிலை களவு எனப்படும். கற்பு என்பது இருவரது பெற்றோரும் உடன்பட்டுத் திருமணம் முடிக்கும் நலை கற்பு எனப்படும்.



UNNATI EDUCATION
9899436384: 9654-279-279

புறவாழ்வு ஐவகை நிலங்களில் பாற்பட்டது. அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பனவாகும். மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி எனப்பட்டது. காடும் பசும் புல்வெளிகளும் சேர்ந்த இடம் முல்லை எனப்பட்டது. குறிஞ்சியின் ஒரு பகுதியும், முல்லையின் ஒரு பகுதியும் சூரியனின் வெப்பத்தால் பாலை நிலம் தோன்றும். கடலும் கடலைச் சார்ந்த இடமும் நெய்தல் ஆயிற்று. வயலும் வயல் சார்ந்த இடம் மருதம் ஆயிற்று. மக்கள் மரங்கள், விலங்குகள், பறவைகள், நீர் நிலைகள், ஊர்கள், இசைக்கருவிகள், மக்களுடையத் தொழில்கள் முதலியவற்றைத் தனித்தனியே எடுத்துக் கூறியுள்ளனர். விலங்குகள், பறவைகள், பொழுது முதலியன மக்கள் வாழ்வில் எங்ஙனம் பயன்பட்டன என்பதையும் விளக்கியுள்ளார்.

**30.** (I) விசுவாமித்திரரின் பெருமையை அறிந்தவர்? **[2]**

*(அல்லது)*

(II) யாருக்கு நன்மைகள் நடக்கின்ற காலம் இது?

**31.** இராமனை முனிவரிடம் அனுப்பிவைப்பாயாக என்று வசிட்டமுனிவர் யாரிடம் கூறினார்? **[2]**

**32.** வசிட்டமுனிவர், தசரதனிடம் இராமனை விசுவாமித்திரரோடு அனுப்பச் சொல்லிய காரணங்களைத் தொகுத்துரைக்க. **[2]**

**33.** பின்வரும் குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை வரைக. **[3]**

கம்பர் – கம்பராமாயணம் – வால்மீகி – காணடங்கள் – இராமன் இலக்குவன் – விசுவாமித்திர முனிவர் – கையடைப் படலம் – முனிவரிடம் அடைக்கலம் – வேள்வியைக் காத்தல் – தசரதன் கூறியது.

UNNATI EDUCATIONS
EK KADAM ... UR

*பிரிவு - இ : இலக்கணம்*

**34.** பின்வரும் ஏதேனும் ஒன்றினுக்குக் கலைச்சொல்லை எழுது. **[1 × 2 = 2]**

(I) AUTOMATION –

(II) CAPACITOR –

**35.** பின்வரும் வினாவிற்கு ஏதேனும் ஒன்றினுக்கு விடையளிக்கவும். **[1 × 2 = 2]**

(I) உவமைகள் என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக.

(II) அஃறிணை என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்கு.

**36.** பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு மரபுத்தொடரை வாக்கியமாக அமைத்து எழுதுக. **[2 × 1 = 2]**

(I) பொடி வைத்தல்

(II) அக்கம் பக்கம்



UNNATI EDUCATION
9899436384: 9654-279-279

பிரிவு - ஈ:

**37.** பின்வரும் வினாவிற்கு விளக்கமாக விடையளிக்கவும். **[3]**

"கொங்குதேர்" எனத் தொடங்கும் பாடற்கருத்தை விளக்குக.

**38.** பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றினுக்கு விடையளிக்கவும். **[1 × 2 = 2]**

(I) பொதுவியல் திணை என்றால் என்ன?

(II) செந்தமிழ் நாட்டின் இயற்கை வளம் பற்றிக் குறிப்பிடுக.

**39.** பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றினுக்கு விடையளிக்கவும். **[1 × 5 = 5]**

(I) நம் நாட்டின் பாதுகாப்பு வலிமைகள் பற்றி அப்துல் கலாம் குறிப்பிடுவன யாவை?

(II) அசோகனின் வாழ்வில் ஏற்பட்ட திருப்பம் யாது?

பகுதி இ - பிரிவு அ:

**40.** பின்வருவனவற்றுள் இரண்டனுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **[2 × 1 = 2]**

(I) தசரதன் அமர்ந்திருந்த ஆசனம் என்ன?

(அ) புலியாசனம் (ஆ) சிங்காசனம்

(இ) சபா மண்டபம் (ஈ) இந்திராசனம்

(II) இயற்கை வளம் ஓங்குவதால் மக்களின் வாழ்வில் எது செழிக்கிறது?

(அ) பொருள் (ஆ) நன்செய்

(இ) மக்கள் நலம் (ஈ) நீர்

(III) நவமணிகளைக் கக்குவன யாவை?

(அ) மலைகள் (ஆ) நாகப் பாம்புகள்

(இ) நவரத்தினங்கள் (ஈ) யானைகள்

**41.** எவையேனும் ஒன்றினுக்கு விடையளிக்கவும். **[1 × 1 = 1]**

(I) முன்னிலைச் சொல் எது?

(அ) நான் (ஆ) நாம்

(இ) நீங்கள் (ஈ) நாங்கள்

(II) ஆறாம் வேற்றுமை உருபு எது?

(அ) அது (ஆ) இன்

(இ) கண் (ஈ) விளி



UNNATI EDUCATION
9899436384: 9654-279-279

**42.** பின்வருவனவற்றுள் சரியான விடையைக் கண்டறிக. [2 × 1 = 2]

(I) பொருந்தாத நூல்களை நீக்க உதவுவது எது?

(அ) பணம் (ஆ) நெறி

(இ) அறிவு (ஈ) நல்வினை

(II) புனல் என்ற சொல்லின் பொருள் என்ன?

(அ) நீர் (ஆ) நெருப்பு

(இ) சோலை (ஈ) செடி

**43.** பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றினுக்கு 20 முதல் 25 சொற்களுக்குள் விடையளிக்கவும். [2 × 1 = 2]

(I) இந்தியா ஒரு வளர்ந்த நாடு விளக்குக.

(II) மாமன்னன் அசோகனின் சிறப்பினைக் கூறு.

**44.** பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றினுக்கு விடையளிக்கவும். [1 × 4 = 4]

(I) காந்தியார் ஆற்றிய முதல் சொற்பொழிவு என்ன?

(II) மௌரிய ஆட்சியின் நினைவுச் சின்னங்களை விளக்குக.

UNNATI EDUCATIONS
EK KADAM UNNATI KI AUR

**45.** "யாதும் ஊரே" எனத் தொடங்கும் கணியன் பூங்குன்றனாரின் பாடற் கருத்தை விளக்குக. [1 × 4 = 4]



UNNATI EDUCATION
9899436384: 9654-279-279